// மின்னஞ்சலில் //

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்,

சென்னை–600 006,

ப.மு.எண்.12075/அ4/இ3/2020, நாள். 17.0.03.2020.

===

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக் கல்வித்துறை - உதவியாளர் நேரடி நியமனம் – (Group–II A Services) (Non - Interview posts) – 2014–2015 மற்றும் 2015–2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட உதவியாளர்களுக்குப் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை:

1. அரசாணை (4டி) எண்.18, பள்ளிக் கல்வித்[ப.க. 4(2)] துறை, நாள்.28.10.2013.
2. அரசாணை (4டி) எண்.353, பள்ளிக் கல்வித்[ப.க. 4(2)] துறை, நாள். 17.12.2013.
3. அரசாணை (நிலை) எண்.34, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (பி) துறை, நாள்.15.04.2015.
4. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3, கடிதம் ந.க.எண். 7208/PSD RF–1/2016, நாள். 08.01.2017 மற்றும் 07.06.2017
5. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 4744/அ4/இ3/2017, நாள். 04.02.2017 மற்றும் 18.08.2017.
6. சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கருத்துருக்கள்.

====

2014–2015 மற்றும் 2015–2016 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் உதவியாளர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் (Group–II A Services) (Non -Interview posts) தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பார்வை (04)ல் கண்ட செயல்முறைகள் மூலம் பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (5)ன் அடிப்படையில் ஆணை வழங்கப்பட்டது.

அவ்வாறு தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வகை 12–ன் கீழ் உள்ள உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்ட கீழ்க்கண்ட பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்யக் கோரி பார்வை (6)ன் வாயிலாக உரிய கருத்துருக்கள் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களின் பரிந்துரையுடன் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்க்காண் உதவியாளர்களுக்கு அவர்களது பெயருக்கெதிரில் கலம் (4)ல் குறிப்பிட்டுள்ள நாளில்பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் / பதவி<br>திரு. / திருமதி. / செல்வி. | பணிபுரியும் அலுவலகம் / பள்ளி | உதவியாளர் பணியிடத்திற்கு பணிவரன்முறைபடுத்தும் நாள் |
|---|---|---|---|
| 1 | மா.வினோத்குமார்,<br>உதவியாளர் | அரசு மேல்நிலைப் பள்ளி, வா.புதூர்.<br>சிவகங்கை மாவட்டம். | 06.02.2017<br>முற்பகல் |
| 2 | இரா.சூர்யா,<br>உதவியாளர் | வட்டாரக் கல்வி அலுவலகம், குளித்தலை<br>கரூர் மாவட்டம். | 06.02.2017<br>முற்பகல் |
| 3 | சி.சாமிதுரை<br>உதவியாளர் | மாவட்டக் கல்வி அலுவலகம்,<br>சேலம் (ஊரகம்)<br>சேலம் மாவட்டம். | 06.02.2017<br>முற்பகல் |
| 4 | ம.கலைச்செல்வி,<br>உதவியாளர் | முதன்மைக் கல்வி அலுவலகம்,<br>திண்டுக்கல், | 09.02.2017<br>முற்பகல் |
| 5 | பா.ஷீமா,<br>உதவியாளர் | வட்டாரக் கல்வி அலுவலகம்,<br>ஒரத்தநாடு,<br>தஞ்சாவூர் மாவட்டம். | 21.08.2017<br>பிற்பகல் |
| 6 | ஐ.முர்சிதாபானு,<br>உதவியாளர் | மாவட்டக் கல்வி அலுவலகம்,<br>புதுக்கோட்டை.<br>புதுக்கோட்டை மாவட்டம். | 23.08.2017<br>முற்பகல் |

மேற்படி பணியாளருக்கு உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்ட ஆண்டு / தரஎண் அடிப்படையில் முன்னுரிமை அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் பணிவரன்முறை குறித்து எழும் ஐயப்பாடுகளை உடனடியாக நியமன அலுவலரின் கவனத்திற்கு சம்பந்தப்பட்ட அலுவலர் கொண்டு வர வேண்டும்.

இந்தப் பணிவரன்முறையானது, பார்வை (4)ல் குறிப்பிட்டுள்ள தேர்வாணையக் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்கின் தீர்ப்புக்கு உட்பட்டதாகும்.

சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவர் இந்தச் செயல்முறைகளை உடனடியாக மேற்படி உரிய நபருக்கு அளிக்க வேண்டும். பணியாளர் வேறு அலுவலகத்திற்கு மாறுதல் செய்யப்பட்டிருப்பின் அவ்வலுவலகத்திற்கு இச்செயல்முறைகளை அனுப்ப வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்./- சு. நாகராஜமுருகன்,
இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி).

பெறுநர்: சம்பந்தப்பட்ட பணியாளர் (உரிய அலுவலர் வாயிலாக).

நகல்: சம்பந்தப்பட்ட அலுவலர் / தலைமையாசிரியர்.

நகல்: சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்.